

POLICY BRIEF

# நோயாளிகளின் உரிமைகள் உளநல ஆரோக்கியத்தை முன்னுரிமைப்படுத்தல்

சட்டம் மற்றும் சமூக நம்பிக்கை நிறுவனம் (Law and Society Trust), கோவிட்-19 தொற்றுநோய் மற்றும் 2022ஆம் ஆண்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி ஆகியவை மக்களின் சுகாதார உரிமை மீது ஏற்படுத்திய தாக்கத்தை ஆராயும் வகையில் ஒரு ஆய்வை மேற்கொண்டது. இந்த ஆய்வு, குடிமக்கள் மற்றும் அரசாங்கத்திற்கிடையேயும், அதேபோல் குடிமக்களுக்கிடையேயும் உள்ள சமூக ஒப்பந்தத்தை மீண்டும் சிந்திக்க வேண்டிய அவசியத்தை நமக்கு உணர்த்தியது. இவ்வாறான சிந்தனை மற்றும் கூட்டு முயற்சிகள் மூலம், நாம் அனைவரும் மனித பாதுகாப்பை உறுதிப்படுத்துவதில் அர்த்தமுள்ள பங்களிப்பைச் செய்ய முடியும். இது சுகாதாரம், கல்வி, வாழ்வாதாரம், அமைதியான இணை வாழ்வு மற்றும் நல்லாட்சிக்கான உரிமை ஆகியவை அனைவருக்கும் கிடைக்க உதவும். மேலும், அனைவரும் தங்களின் அடிப்படை மனித உரிமைகளையும் சுகாதார உரிமைகளையும் அனுபவிக்கக் கூடிய வகையில், மனித மற்றும் நிதி வளங்களை எவ்வாறு ஒருங்கிணைப்பது என்பது குறித்து திறந்த உரையாடல்களும், புதிய யோசனைகளும், திட்டங்களும் தேவைப்படுகின்றன. இந்த ஆய்வு மூலம், நோயாளிகளின் உரிமைகள் குறித்த ஒரு சாசனம், பொது சுகாதார அவசர நிலைகளை மேலாண்மை செய்தல், மற்றும் மனநலப் பிரச்சினைகளை மேம்பட்ட முறையில் அங்கீகரித்து சிகிச்சையளித்தல் போன்ற முக்கியமான பார்வைகள் வெளிப்பட்டுள்ளன.

LAW & SOCIETY TRUST
නීතිය හා සමාජ භාරය
சட்டம் மற்றும் சமூக நம்பிக்கை

info@lstlanka.org

# நோயாளிகளின் உரிமைகள் உளநல ஆரோக்கியத்தை முன்னுரிமைப்படுத்தல்

## அறிமுகம்

2020 ஆம் ஆண்டில், கொவிட் தொற்று நோய்க்கு முகங்கொடுக்க இலங்கை தயாராக இருக்கவில்லை. அரசானது, பெரும்பாலும் வைரஸை கட்டுப்படுத்தும் எதிர்வினைப் பிரதி செயன்முறையிலேயே கவனம் செலுத்தியது.

இந்த அணுகுமுறையானது, நேரடியான அவசர பொதுச் சுகாதார தாக்கங்களைக் குறைப்பதில் வெற்றிகரமாக அமைந்திருந்தது. இருப்பினும், துரதிஷ்டவசமாக ஒரு சுகாதார அவசர நிலையிலும், அதற்கு அரசு பதிலளிக்கின்ற விதத்தினாலும் ஏற்படக்கூடிய உளவியல் பாதிப்புக்கள் மற்றும் உளநல ஆரோக்கிய சவால்களை அரசு கவனிக்கத் தவறிவிட்டது. இந்த புறக்கணிப்பானது, சமூக மற்றும் பொருளாதார பாதுகாப்பு குறைந்தளவில் காணப்படுகின்ற அன்றாட வருமான மீட்டும் கூலித் தொழிலாளர்கள், ஆடைத் தொழிற்சாலைப் பணியாளர்கள், டுபுடீவுஜஒ சமூகத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள் போன்றோரை கடுமையாகப் பாதித்ததோடு, அவர்கள் அதிகளவான உளநலச் சவால்களுக்கு முகங்கொடுக்க வேண்டிய அபாயத்தை அதிகரித்திருந்தது. இதன் விளைவாக, இந்தக் குழுக்கள் மேலும் நிலையுறுதியற்ற நிலைக்குத் தள்ளப்பட்டு, பெருந்தொற்றின் நீண்டகால, ஆழமான, வெளிப்படாத உளநலச் பாதிப்பை அதிகளவில் கொண்டிருக்கும் நிலைக்கு ஆளாகினர்.

இந்தக் கொள்கை ஆவணம், 2022 முதல் 2024 வரையிலான காலப்பகுதியில் 17 மாவட்டங்களில் நடத்தப்பட்ட 18 இலக்குக் குழு கலந்துரையாடல்கள் மற்றும் 13 பொது விசாரணைகள் ஆகியவற்றின் வெளிப்பாடுகளை அடிப்படையாகக் கொண்டது. இது, கொவிட் தொற்றிற்கான பதிலளிப்பு செயன்முறையின் காரணமாக பாதிப்பிற்குள்ளாகக்கூடிய (விளிம்பு) நிலையிலுள்ள மக்கள் மத்தியில் ஏற்படக்கூடிய சமத்துவமற்ற நீண்டகால எதிர்மறையான உளநல பாதிப்புக்கள் குறித்தும், எதிர்கால பொதுச்சுகாதார அவசரநிலைமைகளின் போது கணிசமான உள்ளடங்கலுடன் கூடிய சமத்துவமிக்க கொள்கை வடிவமைப்பிற்கான பரிந்துரைகளையும் கோடிட்டு காட்டுகின்றது.

கொவிட் பெருந்தொற்று சமூகங்களின் மீது ஏற்படுத்திய தாக்கம் குறித்த கற்கையின் விளைவாக உருவான இந்தக் கொள்கை ஆவணம் மற்றும் ஏனைய ஆவணங்களும் ஒன்றாகவே படிக்கப்பட வேண்டும். இதன் மூலம், குறிப்பாக அழுத்தங்கள் காணப்படுகின்ற காலப்பகுதிகளில், சுகாதார சேவைகளை அணுகுதல், நோயாளிகளின் உரிமைகளுக்கான மேம்படுத்தப்பட்ட பாதுகாப்புத் தேவைகள் குறித்தான கோரிக்கைகள், வாழ்வாதாரங்கள், உளநல சுகாதாரம், பாதிப்புற்குள்ளாகக்கூடிய சமூகங்களுக்கான சமூகப் பாதுகாப்பிற்கான புதுப்பிக்கப்பட்ட கோரிக்கைகள் ஆகியவற்றில் கொவிட் தொற்று ஏற்படுத்திய முழுமையான மற்றும் பல்தரப்பட்ட கோணங்களிலான பாதிப்புக்கள் குறித்து பூரணமாகப் புரிந்துகொள்ள முடியும்.

## இலங்கையின் பெருந்தொற்று பதிலளிப்பு செயன்முறையில் பாதிப்பிற்குள்ளாகக்கூடிய குழுக்களின் அதிகரித்துள்ள மன வேதனைகள்

கொவிட் பெருந் தொற்றின் போது அரசினால் மேற்கொள்ளப்பட்ட பதில் நடவடிக்கைகள் மறைமுகமாக நகர்ப்புற, உயர் மற்றும் நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்த, மாத சம்பளத்துடன் கூடிய அலுவலகப் பணியாளர்கள், மற்றும் அவர்களின் பாலின அடையாளம் பிறப்பின் பாலினத்துடன் ஒத்துப்போகும் குழுக்களின் தேவைகளுக்கே ஏற்ப ஒத்திருந்தமையையும், குறிப்பாக பாதிக்கப்பிற்குள்ளாகக்கூடிய மக்கள், கணிசமான பாதிப்பையும் வேதனையையும் அனுபவித்ததையும் ஆய்வின் மூலம் கண்டறியப்பட்ட விளைவுகள் தெளிவாக வெளிப்படுத்தியிருந்தது. இதற்கு மாறாக, கிராமப்புற, ஏழை, டுபுடீவுஜஒ சமூகங்கள் அல்லது உத்தியோகபூர்வமற்ற துறையில் சேவை புரிகின்ற மக்கள், நீண்டகால உளநலச் சவால்களுக்கு உட்படக்கூடிய ஆபத்தான நிலைக்குத் தள்ளப்பட்டனர்.

# நோயாளிகளின் உரிமைகள் உளநல ஆரோக்கியத்தை முன்னுரிமைப்படுத்தல்

இந்தப் பகுதியானது, இலங்கையில் பெருந் தொற்றின் பதில் செயன்முறை பல்வேறு சமூகங்களுக்கு ஏற்படுத்திய சமத்துவமற்ற மற்றும் ஒப்பற்ற உளநல தாக்கங்களை, ஐந்து கருப்பொருளின் கீழ் வெளிப்பாடுகளை ஒவ்வொன்றாக வெளிப்படுத்துகின்றன. இந்த கருப்பொருட்களை தனியாகவோ, தனிமைப்படுத்தப்பட்டதாகவோ பார்க்கக் கூடாது மாறாக, அவை ஒன்றோடொன்று ஆழமாக இணைந்திருப்பவையாக இருப்பதோடு, தனியாகவும், சமாந்தரமாகவும் செயற்பட்டு, ஆரம்பகட்ட பொதுச்சுகாதார அவசரநிலையைத் தாண்டியும் தொடர்ச்சியாக வெளிப்படும் உளநல விளைவுகளை உருவாக்குகின்றன.

## அச்சம், கவலை மற்றும் உளச்சமூக வேதனை ஃபாதிப்பு

பெருந்தொற்றுக் காலப்பகுதியில், சமூகத்தின் பல்வேறு மட்டங்களைச் சார்ந்த (அளவைகள்) மக்கள் பதற்றம் மற்றும் உளவியல் வேதனையை அனுபவித்தனர். எனினும், முதியவர்கள் அல்லது ஏற்கனவே உடல்நலக் குறைபாடுகளைக் கொண்டவர்கள் வாழ்கின்ற குடும்பங்களில் வைரஸ் தொடர்பான அச்ச உணர்வு ஆழமான விதத்தில் வெளிப்பட்டதோடு, புதிய தொற்றுக்களின் பரவல் மற்றும் மரணங்கள் குறித்து தொடர்ச்சியாக ஊடகங்களின் வெளியான செய்திகள் அச்சத்தை மேலும் அதிகரித்தது.

இக் காலத்தில் அரசினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்கள் துக்கத்தையும் மன அழுத்தத்தையும் மேலும் ஆழப்படுத்தின. கொவிட் தொற்றினால் இறந்தவர்களை அடக்கம் செய்வதற்கு உலக சுகாதார அமைப்பு வழிகாட்டுதல்களை வழங்கியிருந்தபோதிலும், அரசு கொவிட் தொற்றினால் உயிரிழந்த அனைவரும் தகனம் செய்யப்பட வேண்டும் என உத்தரவிட்டது. இந்த முடிவானது, குறிப்பாக முஸ்லிம் சமூகத்தினருக்கு பெரும் துக்கத்தையும் மன அழுத்தத்தையும் ஏற்படுத்தியது, ஏனெனில் கட்டாயப்படுத்தப்பட்ட தகனம் என்பது அவர்களின் சமூக வழக்கங்களுக்குட்பட்ட சடங்கு மற்றும் ஆன்மிக ரீதியாக அடக்கஞ் செய்யும் வழிமுறைகளுக்கு முரணானது. இதேபோன்று, பிற சமூகங்களைச் சேர்ந்தவர்களும் (பௌத்தர்கள், இந்துக்கள் மற்றும் கிறிஸ்தவர்கள்) தங்களின் அன்புக்குரியவர்களுக்கு கலாச்சார மற்றும் ஆன்மிக ரீதியான அர்த்தமுள்ள இறுதிச் சடங்கு நிகழ்வுகளை மேற்கொள்ள அனுமதிக்கப்படவில்லை எனக் குற்றஞ் சாட்டினர். இந்த நிலமை அவர்களின் துக்கத்துக்கு மேலதிகமாக குற்ற உணர்ச்சியையும் அனுபவிக்க வேண்டிய நிலையை ஏற்படுத்தியது. இயக்க முடக்கம் (டழஉமனழறா) கூட சில சமூகங்களுக்கு பதட்டத்தின் மூலமாக அமைந்தது. உதாரணமாக, பெருந்தொற்றின் உச்சக்கட்ட நிலமைகளின் போது, சுதந்திர வர்த்தக வலய தொழிலாளர் குழாம் சனப்புழக்கம் நிறைந்த வாடகை விடுதிகளில் தங்கி இருக்க நிர்ப்பந்திக்கப்பட்டதோடு, தங்களின் குடும்பத்தாரிடமிருந்து பிரிந்திருக்கு வேண்டியேற்பட்டது . எதிர்கால பொதுச் சுகாதார பதில் நடவடிக்கைகள் வெறுமனே நோயின் பரவலை மட்டும் கட்டுப்படுத்துவது மாத்திரமல்லாது, உணர்வு ரீதியான மற்றும் உளவியல் நலனோம்புகையையும் பாதுகாக்கும் வகையில் இருக்க வேண்டிய அவசியத்தை இந்த அனுபவங்கள் வலியுறுத்துகின்றன.

## பரிந்துரைகள்

- ☐ குறிப்பாக மிகுந்த ஆபத்தான பகுதிகளில் மற்றும் பாதிப்பிற்குட்படக்கூடிய நிலையிலுள்ள சமூகங்களுக்கான உளநல மற்றும் உளச் சமூக ஆதரவு சேவைகளின் இருப்பு, அணுகுகை மற்றும் ஏற்றுக்கொள்ளக்கூடிய தன்மையை விரிவுபடுத்துதல்.
- ☐ தேசிய பொதுச் சுகாதார அவசர நிலைமைகளுக்கு பதிலளிக்கும் திட்டங்களை வடிவமைக்கும் பொறுப்புக்கொண்ட அமைப்புகளுக்கு உளநல நிபுணர்கள், உளவியல் ஆலோசகர்கள் மற்றும் உளநல மருத்துவர்களையும் சேர்த்துக் கொள்ளல்.

# நோயாளிகளின் உரிமைகள் உளநல ஆரோக்கியத்தை முன்னுரிமைப்படுத்தல்

- ☐ அனைத்து தேசிய பொதுச் சுகாதார அவசர நிலைமைகளுக்கு பதிலளிக்கும் திட்டங்களும், அதன் வடிவமைப்பின் மையக்கருவாக உளநலம், உணர்வு மற்றும் உளச்சமூக கரிசனைகளை சேர்க்க வேண்டும் என்பதனைக் கட்டாயமாக்கல்.
- ☐ அனைத்து தேசிய பொதுச் சுகாதார அவசர நிலைமைகளுக்கு பதிலளிக்கும் திட்டங்களும், குறிப்பாக பாதிப்பிற்குட்படக்கூடிய நிலையிலுள்ள சமூகங்கள் மத்தியில் உணர்வு மற்றும் உளச்சமூக விளைவுகள் குறித்தான மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதைக் கட்டாயமாக்கல்.
- ☐ பொதுச் சுகாதார அவசர நிலைமைகளின் போது சமநிலையான, வெளிப்படையான மற்றும் அதிர்ச்சி உண்டுபண்ணாத செய்திகளின் அறிக்கையிடலை ஊக்குவித்தல்.

## தீவிரப்படுத்தப்பட்ட உடல் ஃஉடலியல் வேதனைகள்

கொவிட் பெருந்தொற்று குறிப்பாக முதியவர்களுக்கும், ஏற்கனவே உடல்நலக் குறைபாடுகளைக் கொண்டவர்களுக்கும் நேரடியான உடல் வேதனையை ஏற்படுத்தியிருந்தது. இருப்பினும், இலங்கை அரசினால் தொற்றுநோய்க்கான பதில் செயன்முறை ஏற்கனவே இவ்வாறாக நிலமைகளைக் கொண்டவர்களின் உடல் வேதனையை மேலும் ஆழப்படுத்தியது. தொற்று ஏற்படக்கூடும் என்ற அச்சத்தின் காரணமாக, புற்றுநோய், இருதய நோய் குறித்தான பிரச்சினைகள், நீரிழிவு அல்லது நீண்டகால சிறுநீரக நோய் போன்ற நீண்டகாலமாக காணப்படுகின்ற நோய்களைக் கொண்ட நோயாளிகள் மருத்துவமனைக்கு செல்ல முடியாமல் போனார்கள் அல்லது பயத்தின் காரணமாக தவிர்த்துக் கொண்டனர். மேலும், பெருந்தொற்றுக் காலப்பகுதியில் சிகிச்சைகளுக்கென சென்ற சில நோயாளிகள், மருத்துவர்கள் பாதுகாப்பான இடைவெளியைப் பேணியதால் தங்களுக்கு முறையான விதத்தில் பரிசோதனை செய்யப்படவில்லை எனத் தெரிவித்தனர். சில அரச மருத்துவமனைகளில் மருந்துகள் கிடைக்காததன் காரணமாக, சிலர் தனியார் மருந்தகங்களில் இருந்து மருந்துகளை கொள்வனவு செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டதால், இது பெரும்பாலும் அதிக செலவான செயற்பாடாக உறுதிப்படுத்தப்பட்டிருந்தது. அரசாங்கம் ஒட்டுமொத்தமாக பெருந்தொற்றின் போது கொவிட் தடுப்பு மற்றும் அதற்கான சிகிச்சைக்கே முன்னுரிமை அளித்ததோடு. ஏனைய நோய்கள் குறித்து கவனஞ் செலுத்தாமையானது, கொவிட் தொற்று அல்லாத நோயாளிகளின், குறிப்பாக ஏற்கனவே உடல்நலக் குறைபாடுகள் கொண்டவர்களின் உடல் நலனில் கணிசமான தீங்கை விளைவித்தன. இந்த நடவடிக்கைகள் ஏற்கனவே பாதிப்பிற்குள்ளாகக்கூடிய நிலையிலுள்ள மக்களிடையே மேலும் உளநல மற்றும் உளச்சமூக சிக்கல்களை உருவாக்கி, உடல் வேதனையை அதிகப்படுத்தியிருக்கக்கூடும் என்பது கவலைக்கிடமான விடயமாகும். எதிர்கால பொதுச் சுகாதார பதிலளிப்பு செயன்முறைகள் அவசர நிலைமைகளுக்கான நோய்த் தடுப்பு மற்றும் அத்தியாவசியமான மருத்துவ சேவைகளின் தொடர்ச்சிக்குமிடையில் ஒரு சமநிலை பேணுதல் அவசியமாகும். குறிப்பாக அதிக ஆபத்தான நிலையிலுள்ள நோயாளிகளுக்கான வழக்கமான சிகிச்சைகளைப் பெற்றுக்கொள்வதை உறுதி செய்தலானது, உடனடியாகவும் மற்றும் நீண்டகாலப்போக்கிலும் ஏற்படக்கூடிய உடல் மற்றும் உளநல தாக்கங்களைக் குறைப்பதற்கு மிகவும் அவசியமானதாகும்.

## பரிந்துரைகள்

- ☐ பொதுச் சுகாதார அவசர நிலைமைகளின் போது, சுகாதார பணியாளர்கள் பாதுகாப்பான, மரியாதையான மற்றும் நோயாளியை மையப்படுத்திய சேவைகளை வழங்கத் தேவையான பயிற்சிகளை அளித்தல்.

# நோயாளிகளின் உரிமைகள் உளநல ஆரோக்கியத்தை முன்னுரிமைப்படுத்தல்

- நோயாளிகள் தங்களின் மருத்துவர்களை அணுகி தங்களுக்குத் தேவையான மருந்துகளை நிகழ்நிலையிலே பெற்றுக்கொள்வதற்கு வசதியாக, மூன்று மொழிகளிலுமான நிகழ்நிலை தொலைமருத்துவ மற்றும் தொலைசுகாதார தளங்களை உருவாக்குதல்.

- ஏற்கனவே உடல்நலக் குறைபாடுகளைக் கொண்டவர்களுக்கு சுகாதார சேவைகள் எவ்விதத் தடையுமின்றி கிடைப்பதனை உறுதி செய்தலை முன்னுரிமைப்படுத்தல்.

- ஏற்கனவே உடல்நலக் குறைபாடுகளைக் கொண்டவர்களுக்கென மொபைல் மற்றும் வீட்டிற்குச் சென்று மருத்துவ மற்றும் சுகாதார சேவைகளை வழங்குவதை நடைமுறைப்படுத்துதல்.

## பொருளாதார அழுத்தங்கள் (அதிகரிக்கும் காரணிகள்)

இலங்கை அரசு, வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்த நாடு தழுவிய இயக்க முடக்கத்தை விதித்த நடவடிக்கையானது, நிகழ்நிலையின் மூலம் பணியாற்றி தொடர்ந்து சம்பளம் பெற முடிந்த நகர்ப்புற அலுவலகப் பணியாளர்களின் பொருளாதார நலனில் குறைந்தளவான தாக்கத்தையே ஏற்படுத்தியிருந்தது. மாறாக, இந்த நடவடிக்கையானது, உத்தியோகபூர்வமற்ற துறையில் பணிபுரிபவர்கள் மற்றும் நடமாற்றம் அவசியமான தொழில்களில் ஈடுபட்டவர்களின் பொருளாதார பாதுகாப்பையும் ஸ்தீரத்தன்மையையும் குறிப்பிடத்தக்களவில் பாதிப்பிற்குள்ளாக்கியது.

உதாரணமாக, மீனவர்கள் கடலுக்கு செல்ல முடியாத நிலைக்கு ஆளாக்கப்பட்டதோடு, போக்குவரத்து தடைகள் மற்றும் சந்தைகள் மூடப்பட்டிருந்தமையால் , மீன்பிடிக்கு அனுமதி கிடைத்த பின்னரும், தங்கள் மீன்பிடிப் பொருட்களை விற்பதில் கடுமையான சவால்களை எதிர்கொண்டனர். வருமான இழப்பானது, குடும்பங்களை கடன் சுமைக்குள் தள்ளி, குழந்தைகளுக்கு உணவளிப்பதா அல்லது அதிகரித்துள்ள கடன்களை மீளச் செலுத்துவதா என்ற கடினமான தேர்வுகளை மேற்கொள்ள வேண்டிய கட்டாய நிலைக்கு தள்ளப்பட்டதாக வவுனியாவில் விவசாயிகள் தெரிவித்திருந்தனர்.

பெருந்தொற்று காலப்பகுதியில் ஏற்பட்ட ஆழமான பொருளாதார ஸ்தீரமற்ற நிலையாலும், மேற்கூறப்பட்டது போன்று கடினமான முடிவுகளை எதிர்கொண்டதும், ஆழமான மன அழுத்தத்தின் மூலகாரணங்களாகக் கருதப்பட்டதோடு, இதனை அடையாளப்படுத்தி அங்கீகரிக்காமலும் தீர்வு காணப்படாமலும் இருப்பின், ஏற்கனவே விளிம்புநிலையிலிருந்த குழுக்களிடையே நீண்டகால உளநலப் பிரச்சினைகளை உருவாக்கக்கூடும். இலங்கையின் பொருளாதாரத்தில் உள்ள கட்டமைப்பு-சார் குறைபாடுகளை வெளிக்கொண்டுவருவதோடு, ஏற்கனவே நிலையுறுதியற்ற நிலையில் உள்ள குழுக்களுக்கு ஏற்படக்கூடிய நீண்டகால உளநலத் பாதிப்புக்களைத் தவிர்ப்பதற்கு, எதிர்கால பொதுச் சுகாதார அவசர நிலைக்காக பதிலளிப்பு திட்டங்களில் பொருளாதார பாதுகாப்பு நடைமுறைகளை ஒருங்கிணைப்பது அவசரமான தேவையென இந்த அனுபவங்கள் கோடிட்டுக் காட்டுகின்றது.

## பரிந்துரைகள்

- அனைத்து தேசிய ரீதியான பொதுச் சுகாதார அவசர நிலைமைகளுக்கான பதில் செயன்முறைத் திட்டங்களிலும், குறிப்பாக உத்தியோகபூர்வமற்ற தொழிற்துறை மற்றும் இயக்கத்துடன் கூடிய தொழில்களிலும் ஈடுபடுபவர்களுக்கான பூரணமான பொருளாதார மற்றும் வாழ்வாதாரப் பாதிப்பு தொடர்பான மதிப்பீடுகள் சேர்க்கப்பட வேண்டும் என்பதனை வலியுறுத்தல்.

# நோயாளிகளின் உரிமைகள் உளநல ஆரோக்கியத்தை முன்னுரிமைப்படுத்தல்

- பொருளாதார நெருக்கடிகள் பல்வேறு சமூகக் குழுக்களை வேறுபட்ட விதமாகப் பாதிப்பிற்குள்ளாகக்கூடும் என்பதை உணர்ந்து, இந்த நெருக்கடிகளின் தாக்கம் அவர்களது உளநலத்திலும் மாறுபட்ட விளைவுகளை ஏற்படுத்தக்கூடும் என்பதனை அங்கீகரித்தல்.

- பொதுச் சுகாதார அவசர நிலைமைகளின் போது வாழ்வாதாரத்தில் பாதிப்பு ஏற்பட்ட தொழிலாளர்களுக்கு நேரடியான நிதி உதவி அல்லது வருமானத்தை ஈட்டக்கூடிய மாற்றீடுகளை வழங்குவதற்கான ஒரு தனித்துவமான தேசிய நிதியை உருவாக்குவதன் மூலம் உளநல அழுத்தத்திற்கான முக்கிய காரணிகளை நீக்குதல்.

## அபிவிருத்தி மற்றும் கல்விச் சவால்கள்

இலங்கை அரசு கொவிட் பெருந்தொற்றுக்கு பதிலளிக்கும் விதமாக, கல்வி கற்பித்தல் பொறிமுறையை நிகழ்நிலைக்கு (ஆன்லைனுக்கு) மாற்றியது. இந்த மாற்றமானது, நாடு முழுவதும் உள்ள மாணவர்களைப் பாதித்திருந்தாலும், கிராமப்புற மற்றும் பெருந்தோட்டப் பகுதிகளிலுள்ள சமூகங்கள் மத்தியில் இதன் பாதிப்புக்கள் மிகவும் கடுமையானதாக இருந்தது. நகரப்புற நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்த குடும்பங்களுக்கு பெரும்பாலும் திடமான இணைய இணைப்பு மற்றும் டிஜிட்டல் சாதனங்களுக்கான அணுகுகை இருந்தாலும், தூரப்பிரதேசங்களில் மிகவும் பின்தங்கியுள்ள பகுதிகளில் உள்ள மாணவர்கள் பங்கேற்பதில் குறிப்பிடத்தக்க தடைகளை எதிர்கொண்டனர். பெற்றோர்கள் வேலையை இழந்ததன் காரணமாக கையடக்கத் தொலைபேசிகள் அல்லது மடிக்கணினிகளை வாங்க முடியாத நிலை ஏற்பட்டமை தொடர்பில் இலக்குக் குழு கலந்துரையாடல்களின் போது தெரியப்படுத்தினர். தங்களது கிராமத்தில் உள்ள சிறுவர்கள் நிகழ்நிலை வகுப்புகளில் இணைவதற்குப் போதுமான வலுவான இணைய அணுகலினைப் பெற அருகிலுள்ள ஒரு மலைப்பிரதேசத்திற்கு நடந்து செல்ல வேண்டியிருந்ததெனக் குறிப்பிட்டிருந்தார். அத்துடன், நீண்ட நேரம் சாதனங்களின் திரைகளைப் பார்த்துக்கொண்டு செலவழிப்பது, சிறுவர்களின் உளநல மற்றும் சமூக வளர்ச்சிக்கு தீங்கு விளைவிப்பதாகவும், கையடக்கத் தொலைபேசி சாதனங்களில் அதிகளவில் தங்கியிருக்கின்ற தன்மை நடத்தைச் பிறள்வுகளைத் தோற்றுவிப்பதாகவும் பெற்றோர்கள் கவலை வெளியிட்டனர். மேலும், நிகழ்நிலைக் கல்வி முறையானது, வகுப்பறை கற்றல் மற்றும் ஏனைய சிறுவர்களுடனும் ஆசிரியர்களுடனும் இடம்பெறும் இடைத்தொடர்புகளோடு ஒப்பிடுகையில் மாற்றீடாக அமையாதென அவர்கள் கருதினர். எனவே, பெருந்தொற்றின் போது மாணவர்களின் கல்விச் செயற்பாடுகள் பாதிக்கப்பட்டது மாத்திரமல்ல, இவ்வாறான அனுபவங்கள் சிறுவர்களுக்கும் அவர்களது பராமரிப்பாளர்களுக்கும் கவலை மற்றும் ஏனைய உளநலப் பிரச்சினைகளின் மூலமாகவும் மாறியிருந்தன.

நிகழ்நிலை கற்பித்தலை நோக்கிய பொறிமுறை மாற்றமானது சிலருக்கு கல்விச் செயற்பாட்டின் தொடர்ச்சியைப் பேண உதவியிருந்தாலும் கூட, ஏனையவர்களை, குறிப்பாக ஏற்கனவே பொருளாதாரம் மற்றும் சமூக ரீதியாக பின்தங்கிய நிலையிலுள்ளவர்களை மேலும் பின் தள்ளியது. இலங்கையில் பல குடும்பங்களின் எதிர்காலக் கனவுகள் கல்வியை மையப்படுத்தியதாக இருப்பதனைக் கருத்திற் கொண்டு, எதிர்கால பொதுச் சுகாதார பதிலளிப்பு செயன்முறை, பாதிப்பிற்குள்ளாகக்கூடிய நிலையிலுள்ள மாணவர்களுக்கான கற்றற் செயற்பாட்டிற்கான வாய்ப்புக்களைப் பாதுகாக்கும் வகையிலான நடைமுறைகளைக் கொண்டிருத்தல் இன்றியமையாததாகும். இவ்வாறான ஏற்பாடுகள் இல்லாத பட்சத்தில், பாதிப்பிற்குள்ளாகக்கூடிய மாணவர்களும் அவர்களது குடும்பங்களும் அனுபவிக்கும் உளநலச் சுமைகள் மேலும் தீவிரமடைவதோடு, கல்விச் சமத்துவத்தின் இடைவெளிகள் மேலும் விரிவடையக்கூடும்.

# நோயாளிகளின் உரிமைகள் உளநல ஆரோக்கியத்தை முன்னுரிமைப்படுத்தல்

## பரிந்துரைகள்

நெருக்கடியான காலப்பகுதியிலும் கல்வியின் முக்கியத்துவத்தினைப் புரிந்துகொள்ளல்.

- கையடக்கத் தொலைபேசிப் பாவனைக்குரிய தரவு சேவைகள் (னுயவய) மற்றும் அதிவேக இணையவழி அணுகுகையை மிகவும் பின் தங்கிய பகுதிகளுக்கு விரிவுபடுத்துதல்.
- இணையவழி அணுகுகை சாத்தியமற்ற பிரதேசங்களில் தொடர்ச்சியான கற்றற் செயற்பாடுகளை உறுதி செய்யும் வகையில், வானொலி, தொலைக்காட்சி மற்றும் அச்சிடப்பட்ட காகிதங்கள் மூலம் கல்வி நடவடிக்கைகள் மேற்கொள்வதை உறுதி செய்து வலுப்பெறச்செய்தல்.
- விளிம்புநிலையிலுள்ள மாணவர்களின் தேவைகள் குறித்து கவனஞ் செலுத்தி, கலப்பு மற்றும் தொலைக்கல்வியை பயனுள்ள விதத்தில் பெற்றுத்தருமுகமாக ஆசிரியர்களை வளம் பெறச்செய்தல்.
- நெருக்கடியான காலப்பகுதியில் மாணவர்களிடையே ஏற்படக்கூடிய உளநலப் பிரச்சினைகளை ஆசிரியர்கள் புரிந்து அவற்றிற்கு உரிய முறையில் பதிற் செயற்பாடுகளை மேற்கொள்ளும் வகையில் அவர்களுக்குரிய பயிற்சிகளை வழங்கல்.

## சமூக மற்றும் கலாச்சார ரீதியான அந்நியப்படுத்தல்கள்

கொவிட் பெருந்தொற்று எதிர்பாராத விதமாக சமூக மற்றும் கலாச்சார ரீதியான அந்நியப்படுத்தல்களின் தோற்றல்களை உருவாக்கியுள்ளது. முதலாவதாக, அரசு முன்னெடுத்த நாட்டை முடக்கும் செயற்பாடு அனைத்து இலங்கையர்களின் சமூக வாழ்க்கையையும் எழுந்தேச்சையாக சீர்குலைத்தது. தனிநபர்களும் குடும்பங்களும் வீடுகளில் மட்டுமே முடக்கப்பட நிர்ப்பந்திக்கப்பட்டதோடு, வெளியுலகத்துடனான தொடர்பு சாதனங்களூடாக மாத்திரமென மட்டுப்படுத்தப்பட்டது. சிலருக்கு இந்த சமூகத் தனிமைப்படுத்தல் செயற்பாடானது, பதற்றத்தின் மூலமாகவும் உளநலக் குறைபாடுகளுக்கும் கூட காரணமாகவும் அமைந்ததோடு, இந் நிலமையானது, சில பெண்களுக்கு குடும்பத்தினுள் அதிகரித்த வீட்டு வன்முறையை அனுபவிப்பதற்கும் வழிவகுத்தது. இரண்டாவதாக, இந்த முடக்கமானது மக்களின் கலாச்சார செயற்பாடுகளிலும் தாக்கங்களை ஏற்படுத்தியது. பொது ஒன்று கூடல்களுக்கு விதிக்கப்பட்ட தடையின் காரணமாக, நாடு முழுவதுமாக சமய ரீதியாக மக்கள் தங்களது கூட்டு சமய செயற்பாடுகளில் ஈடுபட இயலாமல் போனது. ஒரு இந்து பக்தர் தனது அனுபவத்தில் இந்நிலையானது தாங்கள் தங்களது கடவுள்களை புறக்கணித்துவிட்டதாக உணர்ந்து அஞ்சிய அனுபவத்தின் அடிப்படையில், தெய்வங்களிலிருந்து மற்றும் சமய சம்பிரதாயங்களிலிருந்து எற்பட்ட அந்நியப்படுத்தல் சிலருக்கு பதற்றத்தின் மூலமாக அமைந்ததாக தெரியப்படுத்தப்பட்டிருந்தது. மூன்றாவதாக, இலங்கையின் பல பகுதிகளில் வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டவர்கள் சமூக அவமதிப்பின் கூடுதலான பாதிப்பை ஏற்க வேண்டிய நிலை ஏற்பட்டது. இத்தகைய சமூகக் களங்கம், குறிப்பாக பகிரப்பட்ட தங்குமிட வசதிகளில் வசிக்கும் ஆடைத் தொழிற்சாலையில் வேலைசெய்யும் தொழிலாளர்கள், நகர்ப்புற ஏழைகள் அல்லது பெருந்தோட்டத் தொழிலாளர்கள் மத்தியில் பரவல் விரைவாக இடம்பெற்றதுடன், மிகவும் தீவிரமாகவும் காணப்பட்டது. இந்தக் கதைகள் ∴ கருத்துக்கள், கொவிட் பரவலைக் கட்டுப்படுத்த எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மட்டுமல்லாமல், வைரஸ் தொடர்பான சமூகப் பிரதிபலிப்பு போன்றவை, பல்வேறுபட்ட சமூகங்களுக்கு மத்தியில் பதற்றத்தின் மூலமாக

# நோயாளிகளின் உரிமைகள் உளநல ஆரோக்கியத்தை முன்னுரிமைப்படுத்தல்

இருந்ததை வெளிக்காட்டுகின்றன. எனவே, பெருந்தொற்றுக் காலப்பகுதியில் மக்கள் அனுபவித்த சமூக மற்றும் கலாச்சார வாழ்வியல் அனுபவங்கள், அவர்களது வாழ்வில் நீண்ட கால தாக்கங்களை ஏற்படுத்தக்கூடிய உளவியல் மற்றும் உளநல விளைவுகளுக்கு பங்காற்றியுள்ளதை வெளிப்படுத்துகின்றன. ஆகையால் எதிர்கால பொதுச் சுகாதார அவசர நிலைமைகளுக்கான பதில் செயன்முறைகள், இத்தகைய நெருக்கடிகளும் அவற்றிற்கான பதில் செயற்பாடுகளும் எவ்வாறு சமூக மற்றும் கலாச்சார ரீதியாக எவ்வாறு உணரப்படுகின்றன என்பதையும், அவை எவ்வாறு உளவியல் மற்றும் உளநல பாதிப்புகளை ஏற்படுத்தக்கூடும் என்பதையும் கருத்திற் கொள்ள வேண்டும்.

## பரிந்துரைகள்

- ☐ தேசிய பொதுச் சுகாதார அவசரநிலைமைக்கான பதில் செயன்முறை அதற்கான திட்டங்களையும் தகவல் தொடர்பாடல் மூலோபாயங்களையும் வடிவமைக்கும் பொறுப்பு உடைய அமைப்புகளில் சமயத் தலைவர்கள், சமூக அறிவியலாளர்கள், கல்வியாளர்கள் மற்றும் பிற பங்குதாரர்களையும் சேர்த்துக்கொள்வதன் மூலம், சுகாதார அவசர நிலைமைகளினால் ஏற்படும் பாதிப்பானது வெறுமனே சுகாதாரத் துறையை மட்டுமல்லாது அதற்கும் அப்பாற்பட்ட துறைகளையும் பாதிக்கின்றது என்பதை அங்கீகரித்தல்.

- ☐ பொதுச் சுகாதாரச் சவால்களை குறைக்கும் வகையிலும், உரிய சுகாதார வழிகாட்டுதல்களுடன் கூடிய சமய மற்றும் கலாச்சார செயற்பாடுகளை இடையூரின்றித் தொடர அனுமதிக்கும் வகையிலும் பதில் செயன்முறைகளை வடிவமைத்தல்.

- ☐ பொதுச் சுகாதார அவசர நிலைமைகளினால் பாதிக்கப்பட்டவர்களை சமூக வழக்கங்கள் காரணமாக ஏற்படக்கூடிய சேதத்திலிருந்து பாதுகாக்க, களங்க எதிர்ப்பு ஊடக பிரச்சாரங்களை நடத்துதல்.

- ☐ தேசிய பொதுச் சுகாதார அவசர நிலைமைகளின் போது சமூகங்கள் ஒன்றிணைந்து ஒருவருக்கொருவர் உதவியளித்து ஊக்குவிக்கும் வகையிலான புத்தாக்கம் மிகுந்த ஊடகப் பிரச்சாரங்களை நடத்துதல்.

## முடிவுரை

இதுவரை நிகழ்த்திராத அளவுக்கு ஏற்பட்ட பொதுச் சுகாதார அவசர நிலைமைக்கு, அதன் அரசு நியாயமான முறையில் பதிற் செயன்முறையை மேற்கொண்டுள்ளதை இலங்கையின் கொவிட் பெருந்தொற்று தொடர்பான புள்ளிவிபரங்கள் எடுத்துக் காட்டுகின்றன. உலகிலே மேம்பட்ட நிலையில் காணப்பட்ட பொருளாதாரங்களைக் கொண்ட நாடுகளோடு ஒப்பிடும்போது இலங்கையின் கொவிட் தொற்றுக்கள் மற்றும் மரண விகிதங்கள் குறிப்பிடத்தக்களவில் குறைவாகவே காணப்பட்டன. இது, ஆரம்பத்தில் பொதுச் சுகாதார அவசர நிலைமையின் சவால்களுக்கு முகங்கொடுத்த தயாராக நிலையில் இல்லாதிருந்த போதிலும், கடுமையான முடக்கங்களை விதித்தல், தனிமைப்படுத்தும் நிலையங்களை உருவாக்குதல், வீட்டில் தனிமைப்படுத்தப்பட்டிருந்தஇ கொவிட் நோயாளிகளுக்கு வரையறுக்கப்பட்ட நலனோம்புகைப் பொதிகள் வழங்குதல், பாடசாலை கற்பித்தல் செயற்பாடுகளை தேசிய தொலைக்காட்சி மற்றும் வானொலியில் ஒளிபரப்புதல், மருத்துவமனையிலிருந்து நோயாளிகளுக்கு தேவையான மருந்துகளை தபால் மூலம் அனுப்புதல் போன்ற முடிவுகள் பெருந்தொற்றின் சுகாதார விளைவுகளை குறைத்துள்ளது என்பதனைச் சுட்டிக்காட்டுகிறது.

# நோயாளிகளின் உரிமைகள் உளநல ஆரோக்கியத்தை முன்னுரிமைப்படுத்தல்

எனினும், இந்தக் கொள்கை ஆவணம் வலியுறுத்துவது போல், பாதிப்பிற்குள்ளாகக்கூடிய சமூகங்களின் வாழ்வியல் அனுபவங்கள் இன்னும் சிக்கலான தோற்றத்தை வெளிப்படுத்துகின்றன. அரசின் பெருந்தொற்று பதிலளிப்பு செயன்முறை, பாதிப்பிற்குள்ளாகக்கூடிய சமூகங்களை எல்லை மீறியதான எதிர்மறைத் தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளதை அவர்களின் வாழ்வியல் கதைகள், வெளிக்கொண்டுவருகின்றன. இத்தகைய அனுபவங்கள், ஏற்கனவே பாதிப்பிற்குள்ளாகக்கூடிய நிலையிலுள்ள குழுக்களிடையே உளநலப் போராட்டங்களையும் சிக்கல்களையும் அதிகரிக்கக்கூடும். இந்நிலைமையில், ஒரு பொதுச் சுகாதார அவசர நிலைமையின் போது உளநல பாதிப்புக்களை அதிகமாகச் எதிர்கொள்ள வேண்டிய சமூகமாக பாதிப்பிற்குள்ளாகக்கூடிய சமூகங்களே காணப்படுகின்றன. காலப்போக்கில் இக்குழுக்கள் சமூக, அரசியல் மற்றும் பொருளாதார செயல்முறைகளுடன் மட்டுமல்லாது, தங்களது பாதிக்கப்பட்ட உளநலத்துடனும் போராட வேண்டிய பாரதூரமான துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப்படலாம். எனவே, எதிர்கால இலங்கை அரசுகள், சமூகத்திலுள்ள பாதிப்பிற்குள்ளாகக்கூடிய சமூகப் பிரிவுகளின் நலனைக் குறைக்காமல் பொதுச் சுகாதாரத்தைப் பாதுகாக்கும் வகையில் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்பதற்காகவே இந்தக் கொள்கை ஆவணம் பரிந்துரைகளை முன்வைக்கின்றது. எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய பொதுச் சுகாதார அவசர நிலைமைகளுக்கு உள்ளடங்கலுடன் கூடிய, பூரணமானதும், துல்லியமானதுமான பதிலளிப்பு பொறிமுறையை வடிவமைப்பதில் இந்த ஆவணம் உதவுமென நம்பப்படுகிறது.